1974 ஏப்ரல் 4]

Hospital Pharmacy.

* 749 Q.—THIRU K. T. K. TANGAMANI AND THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it is a fact that the Director of Medical Education has submitted a report regarding the starting of Hospital Pharmacy; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்ற ஆண்டு மதுரையிலுள்ள பி.பார்மஸி மாணவர்கள் இந்தக் கோரிக்கையையும், இன்னும் சில கோரிக்கைகளையும் வைத்து உண்ணுவிரதம் இருந்தார்கள். அப்போது ஆஸ்பத்திரி பார்மஸி ஆரம்பிக்கப்படும் என்று அந்த மாணவர்களுக்குச் சொல்லப்பட்டதே, அதை ஆரம்பிப்பதற்கு இன்னும் எத்தனை காலம் ஆகும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப் பட்டு—அதற்காக நிபுணர்கள்—அந்தத் துறை சார்புடையவர்கள்—இன்னும் வரவு செலவு கணக்கில் தேர்ந்தவர்கள் மூலம் பரிசீலிக்கப்பட்டு கடைசியாக அவர்களால் தரப்பட்ட அறிக்கை இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. புதியதாகத் தொடங்கப்படுகிற ஒன்று நல்ல முறையில் பரிசீலனை செய்யப் படாது, தேர்ச்சி இல்லாமல் தொடங்கப்படுமானல் அதன் விளைவுகள் அவ்வளவு மகிழ்ச்சி தருவதாக இருக்காது. ஆகவே எல்லாவிதமான நுணுக்கங்களும் ஆராயப்பட்டு துவங்கப்பட வேண்டும் என்பதனால்தான் காலதாமதம் ஆகிறது. எப்படியும் விரைவில் துவங்க வேண்டுமென்ற நோக்கம் அரசுக்கு இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : இந்த மருந்தகம் ஆரம்பிப்பதற்கான அறிக்கை அரசினிடத்தில் எப்போது தரப்பட்டது? அது இன்னும் எவ்வளவு நாட்களில் பரிசீலனை செய்யப்பட்டு துவங்கப்படும்? பி.பார்மஸி படித்தவர்களுக்கு வேலை தருவதற்கான காரணத்தை உத்தேசித்து அவசரமாக இதைச் செயல்படுத்த அரசு முடிவு எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பி. பார்மஸி மட்டும் அல்ல—எந்தவிதமான தொழில் பயிற்சி படித்தவர்கள் எல்லோருக்கும் அரசே வேலை தருவது என்பது இயலாத காரியம். இதனால் எல்லோருக்கும் வேலை கிடைக்கும் என்ற எண்ணம் ஏற்படத் தேவையில்லை. இப்படி சில அமைப்பு

களை ஏற்படுத்துவதிலேயே ஒருவகையான பயிற்சி தேர்ச்சி பெறுகிறவர்களுக்குக் கிடைக்கக் கூடும் என்பது ஒரு காரணம், சிலருக்கு வேலை கிடைப்பதோடு கூட பல்வேறு வகையில் பயிற்சி பெறுகிறவர்களுக்கு ஊக்கம் ஊட்டுவதாக இருக்கும். மற்றொன்று—மருத்துவ மனைகளுக்குத் தேவைப்படுகிற நம்பகமான—தரமிக்க மருந்துகளை உற்பத்தி செய்துகொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைக்கிறது. அது பற்றிய ஆய்வுப் பணிகள்தான் இப்போது முடிந்திருக்கிறது. இன்னும் கட்டிட பணிகள்—தேவையான கருவிகளைப் பெறும் பணிகள் பற்றி ஆராய்ந்தாக வேண்டும். 3—9—73-ல்தான் இவர்களது அறிக்கை அரசுக்குக் கிடைத்தது. இதனை வெவ்வேறு கட்டத்தில் அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : பி.பார்மஸி படித்த மாணவர்கள் வெளியில் சொந்தமாக தொழில் துவங்க விரும்பினால்—அப்படித் தொழில் துவங்குவது நாட்டுக்கு நன்மை பயக்கும் என்ற காரணத்தினால்—அரசு அவர்களுக்குச் சலுகை வழங்க—மானியம் வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பொதுவாகவே இப்போது எதற்கெடுத்தாலும் மானியம் வழங்கப்படுமா என்கிறார்கள். தொழிலுக்கு மானியம் வழங்குவது என்பது இயலக்கூடிய ஒன்றல்ல. கடன் வேண்டுமானால்—கடன் கேளுங்கள்—கேட்டால் கொடுப்பார்கள்—என்கிற அளவுக்கு திருமதி இந்திரா காந்தி அம்மையார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் வங்கிகளை தேசியமயமாக்குவதன் மூலம். அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பதிவுத் துறை உதவிப் பதிவாளர்கள்.

* 750 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970ஆம் ஆண்டில் பதிவுத் துறையில் உதவியாளராகப் (Assistant) பணியாற்றியவர்களில் மாநில முழுவதும் எத்தனை பேருக்கு உதவிப் பதிவாளராக (Sub-Registrar) பதவி உயர்வு கொடுக்கப்பட்டது ?

(இ) 1971ஆம் ஆண்டில் பதவி இறக்கம் மீண்டும் செய்யப்பட்டது உண்மையா ?